மேச்சேரியை அடுத்த குட்டப்பட்டியில் ஜே.எஸ்.டபிள்யூ பவுண்டேஷன் மூலமாக ஏரி தூர்வாரப்பட்டு, மழைநீர் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

ஜே.எஸ்.டபிள்யூ பவுண்டேஷன் மூலம் ஏரி தூர்வாரப்பட்டு, மழைநீர் சேகரிப்பு

■ மேட்டூர்

சேலம் மாவட்டம் பொட்ட னேரியில் உள்ள ஜே.எஸ்.டபிள்யூ ஸ்டீல் லிமிடெட் நிறுவனம், விவசாயிகள் மற்றும் பொது மக்களின் நலனில் அக்கறை கொண்டு ஜே.எஸ்.டபிள்யூ பவுண்டேஷன் மூலமாக பல்வேறு வகையான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்த அடிப்படையில் நீர் ஆதார மேம்பாட்டு செயல்பாடுகளை முனைப்புடன் மேற்கொண்டுவருகிறது. தற்போது, மேச்சேரியை அடுத்த குட்டப்பட்டி ஊராட்சியில் புதர் காடாக இருந்த ஏரியின் முட்புதர்களை முழுமையாக நீக்கி தூர்வாரியும், மழைநீர் வழித்தட ஓடைகள் சீரமைக்கப்பட்டு, மழைநீர் முழுமையாக ஏரியை சென்றடைய தேவையான பணிகளும் ஜே.எஸ்.டபிள்யூ பவுண்டேஷன் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஏரியின் ஆழம் அதிகரிக்கப்பட்டு அனைத்து பக்கங்களில் உள்ள கரைகளும் பலப்படுத்தப்பட்டு மழைநீரை சேமிக்க ஏதுவாக தடுப்பும் கட்டப்பட்டது. இந்த மறுசீரமைப்பின் மூலம் ஏரியில் மழைநீர் சேகரிப்பு கொள்ளளவு 25 ஆயிரம் கனமீட்டர் அளவில் அதிகரிக்கப்பட்டு, ஆண்டுக்கு சுமார் 7.50 கோடி லிட்டர் தண்ணீர் சேகரிக்கப்படும். ஏரியின் ஆயக்கட்டு பகுதியான 198 ஹெக்டேர் விவசாயநிலங்கள் பாசனம் பெற்று பயனடைகிறது. ஏரியின் இந்த புதிய நீர் சேகரிப்பின் மூலம் வறண்ட காலங்களில் கூட நீர்ப்பாசன முறையில் விவசாயம் செய்து விவசாயிகள் வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்ள ஏதுவாகிறது.

1,050 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல் பவானிசாகர் அருகே இளைஞர் கைது

■ ஈரோடு

பவானிசாகர் அருகே காரில் கடத்தப் பட்ட 1,050 கிலோ ரேஷன் அரிசியைப் பறிமுதல் செய்த போலீஸார் ஒருவரைக் கைது செய்தனர்.

ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ரேஷன் அரிசியை கடத்தி, வடமாநில தொழிலாளர்களுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்யும் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இதைத் தடுக்க, ஈரோடு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை போலீஸார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் பவானிசாகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, கொத்தமங்கலம் நால்ரோடு பகுதியில் ஈரோடு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை இன்ஸ்பெக்டர் சுதா, சப்-இன்ஸ்பெக்டர் மேனகா மற்றும் போலீஸார், வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்ததில் 1,050 கிலோ ரேஷன் அரிசி கடத்தி வரப்பட்டது தெரியவந்தது.

இதையடுத்து, காரை ஓட்டி வந்த பவானியைச் சேர்ந்த தனபாலை (26) கைது செய்த போலீஸார், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரையும் பறிமுதல் செய்தனர்.

சென்னிமலை முருகன் கோயிலில் கார்த்திகை தீபத்திரு விழாவை ஒட்டி நேற்று கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது.

சென்னிமலையில் கார்த்திகை தீப திருவிழா

■ ஈரோடு

சென்னிமலை முருகன் கோயிலில் கார்த்திகை தீபத்திருவிழா நடந்தது.

சென்னிமலை முருகன் கோயிலில் கார்த்திகை தீபத்தை முன்னிட்டு நேற்று மாலை 4 மணி முதல் முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் உற்சவமூர்த்திகள் 3 முறை கோயிலை வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

அதைத்தொடர்ந்து, 3 தீபங்களுக்கு பூஜைகள் செய்யப்பட்டு அதனை கோயிலின் 5 நிலை ராஜகோபுரத்துக்கு முன்புறம் கொண்டு வரப்பட்டது. கோயிலின் முன்புறம் உள்ள 25 அடி உயர தீபஸ்தம்பத்தில் கூரபாளையம் கார்த்திகை தீப கட்டளைதாரர்கள் சார்பில் முதல் தீபம் ஏற்றப்பட்டது. தொடர்ந்து கோயில் வளாகத்தில் உள்ள மார்க்கண்டேசுவரர்-உமையவள்ளி சந்நிதி முன்புறம் உள்ள தீபஸ்தம்பத்தில் 2-வது தீபம் ஏற்றப்பட்டது.

இறுதியாக கோயிலின் வெளிப்புறம் உள்ள மதில் சுவரில் சிவன்மலை ஆண்டவருக்காக 3-வது தீபம் ஏற்றப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை

சேலம் மாவட்ட ஆட்சியர் தகவல்

■ சேலம்

குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது, என சேலம் ஆட்சியர் பிருந்தாதேவி தெரிவித்துள்ளார்.

காவல்துறை, மாவட்ட சமூக நலத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அடங்கிய குழு இணைந்து பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கை குறித்த ஆய்வுக் கூட்டம் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடந்தது.

மாவட்ட ஆட்சியர் பிருந்தாதேவி தலைமை வகித்து பேசியது:

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான உதவி சேவை மையம் சேலம் ஆட்சியர் அலுவலக அறை எண்-120-ல் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. குழந்தை உதவி மையம் புறத்தொடர்பு பணிகள் சேலம் பதிய பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வருகிறது. இது தவிர 1098 என்ற எண்ணில் குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்கள் குறித்த புகார்களை தெரிவிக்கலாம்.

சேலம் ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வு கூட்டத்தில் ஆட்சியர் பிருந்தா தேவி பேசினார். உடன் மாவட்ட சமூக நல அலுவலர் கார்த்திகா உள்ளிட்டோர்.

கடந்த நவம்பர் மாதம் குழந்தைகள் உதவி மையத்துக்கு 204 அழைப்புகள் மற்றும் சந்திப்புகள் வரப்பெற்றன.

குழந்தை திருமண புகார்

இதில், 85 அழைப்புகள் குழந்தைகள் நலக்குழு மூலம் விசாரிக்கப்பட்டு தேவையான மறுவாழ்வு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 119 அழைப்புகளுக்கு உடனடியாக சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நேரில் சென்று, குழந்தைகளை சந்தித்து பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

குழந்தைத் திருமணம் தொடர்பாக மாவட்ட அளவில் 27 புகார்கள் வரப்பெற்றதில் 6 திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன. 14 அழைப்புகள் தவறான தகவல் என நேரடி ஆய்வில் அறியப்பட்டுள்ளது. 7 புகார்கள் பிற மாவட்டம் சார்ந்தவை.

குழந்தைகள் திருமணம் தொடர்பாக வரப்பெற்ற அனைத்து புகார்களுக்கும் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், மாவட்ட சமூக நலத்துறை, காவல் துறை, தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து ஒவ்வொரு மாதமும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அறிக்கை அளித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட சமூக நல அலுவலர் கார்த்திகா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் முரளி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சமுதாய நல்லிணக்கத்துக்கான

கபீர் புரஸ்கார் விருதுக்கு விண்ணப்பிக்க அழைப்பு

■ சேலம்/நாமக்கல்

சமுதாய நல்லிணக்கத்துக்கான தமிழக அரசின் கபீர் புரஸ்கார் விருதுபெற தகுதியானவர்கள் விண்ணப்பிக்க நாளை (15-ம் தேதி) கடைசி நாளாக அறிவிக்கப்பட்டுளது.

சமுதாய நல்லிணக்கத்துக்கான கபீர் புரஸ்கார் விருது, குடியரசு தினத்தன்று தமிழக முதல்வரால் வழங்கப்படுகிறது. சாதி, இன, வகுப்பு கலவரங்களில் ஏற்படும் வன்முறையின் போது பாதிக்கப்பட்டவர்களை, அவர்களது உடைமைகளைக் காப்பாற்றியவர்கள் இந்த விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

ஆயுதப்படை வீரர்கள், போலீஸ், தீயணைப்புத் துறை மற்றும் அரசுப் பணியாளர்களின் சமுதாய நல்லிணக்க செயல், அவர்கள் ஆற்றும் அரசுப்பணியின் ஒரு பகுதியாக நிகழும் பட்சத்தில் அவர்கள் விண்ணப்பிக்க முடியாது. மூன்று பிரிவுகளில் வழங்கப்படும் இந்த விருதுக்கு தகுதியானவர்கள் https://awards.tn.gov.in என்ற இணையதளத்தில், நாளைக்குள் (15-ம் தேதி) விண்ணப்பிக்க வேண்டும்.

அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு, குடியரசு தினத்தன்று தமிழக முதல்வரால் இந்த விருது வழங்கப்படும் என சேலம், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

வரி விளம்பரங்கள்

பிறசேவை பகுதி

அறிவிப்பு

கனம் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கிருஷ்ணகிரி

G.O.P.No. 120 / 2024

திருமதி. கவிதா, க/பெ. ராஜேஷ், கதவு எண்.2/514, உலகம், எலுமலை அஞ்சல், கிருஷ்ணகிரி - 635109. ... மனுதாரர்

எதிர்

1. திருமதி. ஆனாவதி, க/பெ.முனியாண்டி, த/பெ.வெங்கடாசலம், கதவு எண்.75, மஞ்சமலை, அத்திமுச் வட்டம், ஈரோடு மாவட்டம்.

2. திருமதி. அமுதா, க/பெ. குட்டப்பன், த/பெ.வெங்கடாசலம், கதவு எண்.2/633, M.அலிசிபம், ஆதாளஹள்ளி, குருபரபட்டி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். ... எதிர்மனுதாரர்கள்

பொது அறிவிப்பு

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இரு வர்.பூமிகளின் உடன் பிறந்த சகோதரிகள் ஆவர். கீழே சொத்து விவரத்தில் குறிப்பிட்ட சொத்தானது மேற்படி இவருடன் சேர்த்து, 4 சகோதரிகளும் இணைந்து 19.03.2024 தேதியிட்ட 1239/2024 என்ற ஆவண எண் கொண்ட கிரைய ஆவணத்தின் மூலம் கிரயம் பெற்ற சொத்தாகும். மேற்படி நபர்களுக்கு பாத்தியப்பட்ட கீழ்க்கண்ட சொத்தை ரூ.1,53,500/- (ஒரு லட்சத்து அறுபத்தி மூவாயிரத்து நூறு ரூபாய்க்கு நீதிமன்ற அனுமதி பெற்று விற்பனை செய்யும் பொருட்டு திரு. சம்பவாது, த/பெ. இல்லாமல், கதவு எண்.2/637A, அலிசிபம் கிராமம், ஆதாளஹள்ளி, குருபரபட்டி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் என்ற முகவரியில் வசிக்கும் மேற்படி நபருக்கு 18.07.2024 தேதியிட்ட 2870/2024 என்ற எண் கொண்ட கிரைய உடன்படிக்கை ஆவணத்தை எற்படுத்தி விற்பனை செய்ய அனுமதி கோரி மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி வழக்கு வரும் 18.12.2024 ஆம் தேதி பட்டியலிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி வாய்தா தேதியில் பொதுமக்கள் யாருக்கேனும் மேற்படி இனவர்களின் சொத்து விற்பனை சம்பந்தமாக ஆட்சேபனை இருப்பின் மற்றும் கிரைய ஒப்பந்தம் தொகையான ரூ.1,53,500/-க்கு கூடுதலாக தொகை ஏதேனும் வழங்கி கிரைய ஒப்பந்தம் எற்படுத்திக் கொள்ள விருப்பம் இருப்பின் வரும் 18.12.2024 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கவும்.

சொத்து விபரம்

In Ayamapalli village, of Shoolagiri Taluk, attached to Rayakottai Sub-registration District, and Krishnagiri Registration District of Krishnagiri District.

1. Survey Number : 744/1C, Dry Extent Hec. 0.23.5, Asst. Rs. 0.15, further sub divided as 744/1C2B for an extent of Hec. 0.05.77, out of this an extent of Hec. 0.00.91 or Ac.0.02.25 cents in new survey no. 744/9, within the following boundaries : East : Land in Survey no.744/7, West : Land belonged to Rathinamma in survey no.744/1C2A, North : Common Road in survey no.744/1C2B, South : Land belonged to Saraswathi.

2. Survey number : 744/1D, dry extent Hec. 0.29.0, Asst. Rs.0.18., further sub-divided as 744/1D1A for an extent of Hec.0.13.93., out of this an extent of Ac.0.01.50 cents in new survey no.744/9, within the following boundaries : East : Land belonged to Kamala, West : Land in survey no.744/9, North : Common road in survey no.744/1D1A, South : Land belonged to Saraswathi.

Both the survey numbers making a total extent Ac.0.03.75 cents and the common pathway from Rathinamma land to Setta land on East to West on Northern side must not obstructed by anyone

R.NARAYANAN, B.A.B.L., ADVOCATE
Opp. to New Housing Board-II, Rayakottai Road, Krishnagiri-635001
Enroll No: MS 2867/2007

சுவாதீன அறிவிப்பு

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் (முன்னதாக அறியப்படுவது ஜனா லஷ்மி பைனான்சியல் சர்வீஸ் லிமிடெட்)-யின் அதிகாரபூர்வ அலுவலராக கீழே கையொப்பமிட்டுள்ளவர், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(2)ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகளில், விதி 3-ன் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரர்(கள்)/இணை-கடன்தாரர்(கள்)-களுக்கு **கோரிக்கை அறிவிப்புகளை** அனுப்பி அந்த அறிவிப்புகிடைத்த **60 நாட்களுக்குள்** அதில் கீழ்காணும் பாக்கித் தொகை அத்துடன் கடனுக்கான வட்டி, செலவுகள், கட்டணங்கள், இதரவை, தொகை செலுத்தும் நாள் வரை மற்றும்/அல்லது உணர்த்துதல் வரை சேர்த்து செலுத்துமாறு கோரியிருந்தார்.

வ. எண்.	கணக்கு எண்.	கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/அடமானதாரர்	13(2) அறிவிப்பு நாள்/நிலுவை தொகை (ரூபாயில்) தேதி	நாள் / நேரம் & சுவாதீன வகை
1	30459440000983 30459630000715 & 30459410000632	1) திரு. அம்மாசி உரிமையாளர், M/s. Ammasi Power Looms, த/பெ. கந்தசாமி, 2) திரு. பழனியம்மாள், க/பெ. திரு. அம்மாசி	07.10.2024, 06.10.2024 தேதியில் ரூ. 14,28,517.30	12.12.2024 01.58 PM. சிம்போலிக் சுவாதீனம்
	சொத்தின் அட்டவணை : அசையா சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், தமிழ்நாடு, நாமக்கல் மாவட்டம், நாமக்கல் Rd, மல்லசமுத்திரம் SRD, 12வது வார்டு, பாரதியார் தெரு, காளிபட்டி நத்தம், மல்லசமுத்திரம் கீழ்முகம் கிராமம், திருச்செங்கோடு தாலுகா, பழைய சர்வே எண். 72/1, பட்டா எண். 2003, புதிய சர்வே எண். 72/1 2 தொடர்பான நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் பின்வரும் **எல்லைகள் : கிழக்கில் :** பெருமயம்மா அவர்களின் வடக்கு-தெற்கு பாதை, **மேற்கில் :** பழனியாசாரி அவர்களின் சொத்து, **தெற்கில் :** கிழக்கு-மேற்கு பாதை, **வடக்கில் :** பெய்மாயம்மாள் அவர்களின் சொத்து. பரப்பளவு கிழக்கு-மேற்கு இருபக்கமும் 35 அடி, வடக்கு-தெற்கு இருபக்கமும் 12 அடி, மொத்தம் 420 சதுர அடி முழு நிலம் மற்றும் அனைத்து பாதை உரிமைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட அடிப்படை உரிமைகள்.		
2	46038640001055 46039410000105 & 4603020000051740	1) M/s. Venkateshwara Powerloom and Consulting, உரிமையாளர், திரு. ஆறுமுகம் மினியகவுண்டர், த/பெ. மினியகவுண்டர், 2) திரு. ஆறுமுகம் மினியகவுண்டர், உரிமையாளர் Venkateshwara Powerloom and Consulting, த/பெ. மினியகவுண்டர். 3) திருமதி. A பழனியம்மாள், க/பெ. ஆறுமுகம்	07.10.2024, 06.10.2024 தேதியில் ரூ. 41,95,482.78	12.12.2024 01.58 PM. சிம்போலிக் சுவாதீனம்
	சொத்தின் அட்டவணை : நிலம் மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், அளவுகள் 2027 1/2 சதுர அடி பரப்பு அத்துடன் கட்டப்பட்ட கட்டிடம் மற்றும் கதவு எண். 7-1-118, 7-1-120, 7-1-121-ல் அமைந்த சர்வே எண். 4/5, துணை பிரிவு சர்வே எண். 4/5ஏ1ஏ, தற்போது துணைபிரிவு பட்டா எண். 1555, புதிய சர்வே எண். 4/17, தொரமங்களம் கிராமம், மேட்டூர் தாலுகா, சேலம் மாவட்டம், தமிழ்நாடு. **எல்லைகள் : வடக்கு :** மணி அவர்களின் நிலம், **தெற்கு :** மறுசர்வே எண்.4/4-ன் நிலம், **கிழக்கு :** ஜெகதேசன் மற்றும் மற்றவர்களின் நிலம், **மேற்கு :** 15 அடி அகல வடக்கு தெற்கு சாலை, புதிய 7 வார்டு. மேற்குறிப்பிட்ட எல்லைகளின் அளவுகள் கிழக்கு மேற்கு 55 அடிக்கு வடக்கு பக்கம், கிழக்கு மேற்கு 45% அடிக்கு தெற்கு பக்கம், வடக்கு தெற்கு 51 அடிக்கு கிழக்கு பக்கம், வடக்கு தெற்கு 29 1/2 அடிக்கு மேற்கு பக்கம் அளவுகள் 2027% சதுர அடி பரப்பு முழுநிலம் மற்றும் அனைத்து பாதை உரிமைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட அடிப்படை உரிமைகள். மேற்குறிப்பிட்ட நிலத்தின் விவரம் தொரமங்களம் கிராமம், மேட்டூர் தாலுகா, சேலம் மாவட்டம், ஜெலகண்டபுரம் சார்-பதிவு மாவட்டம் மற்றும் சேலம் மேற்கு பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.		

மேற்படி பாக்கித்தொகையை மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்கள்/அடமானதாரர்கள் செலுத்த தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர் குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8-ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை மேற்குறிப்பிட்டுள்ள தேதியன்று **சுவாதீனம்** செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட கடன்தாரகள்/ இணை-கடன்தார்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான சொத்துக்கள்/அடமான சொத்துக்கள் விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு** செலுத்தப்பட வேண்டிய பாக்கித்தொகை மற்றும் கடனுக்கான வட்டி சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

இடம் : சேலம்
நாள் : 13.12.2024

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : 259/4/129, சேஷம்மாள் டவர்ஸ், சாரதா காலேஜ் சாலை, அண்ணாசாலை எதிரில், அழகாபுரம், சுவர்ணபுரி, சேலம் - 636016.

இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு பக்த ஆஞ்சநேயர் திருக்கோயில்
தயிர்பாளையம், பவானி வட்டம், ஈரோடு மாவட்டம்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (ஒரு உறை முறை)

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், தயிர்பாளையம், அருள்மிகு பக்த ஆஞ்சநேயர் திருக்கோயில் திரும்ப கட்டும் பணிக்கு பவானி சரக ஆய்வரால் கீழ்காணும் பணிக்கு **16.12.2024** தேதி முதல் **31.12.2024** தேதி பிற்பகல் **12.30** மணி வரை **www.tntenders.gov.in** என்ற இணையதளம் மூலமாக வரவேற்கப்படுகிறது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **31.12.2024** பிற்பகல் **3.30** மணியளவில் இணையதளம் வாயிலாக திறப்பு செய்யப்படும்.

வ.எண்.	பணியின் பெயர்	ஒப்பந்தப் புள்ளி தொகை ரூபாய் (இலட்சத்தில்)	முன் வைப்பு தொகை	டெண்டர் படிவம் விலை	முடிக்க வேண்டிய காலம்	ஒப்பந்ததாரர் தகுதி
1	ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், தயிர்பாளையம், அருள்மிகு பக்த ஆஞ்சநேயர் திருக்கோயிலை திரும்ப கட்டும்பணி	ரூ.54.11	ரூ.38,500/-	இணையதளம் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்	9 மாதங்கள்	தமிழ்நாடு அரசு விதிகளின் படி துறை சார்ந்த பணி மதிப்பிற்கேற்ப உரிய வகுப்பில் உள்ள பதிவு பெற்று பொருத்தமான நடப்பில் உள்ள ஒப்பந்ததாரர்கள்

ஒப்பந்ததாரர் இந்து சமய அறநிலையத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையில் உள்ள ஸ்தபதி/சிற்பி (கருங்கல்) சம்மதக் கடிதம் பெற்று இணைக்கப்பட வேண்டும்.
ஒப்பந்ததாரர் தகுதி மற்றும் இதர நிபந்தனைகள் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் இணைக்கப்பட்டுள்ளது. திருத்தங்கள் / மாறுபாடுகள் இருப்பின் இணையதளம் மூலம் மட்டுமே அறிவிக்கப்படும்.

அறங்காலவலர் ஆய்வாளர்
வெ.ஆ.எண்.350/செ.ம.தொ.அ/2024/ஈரோடு

எஸ்.எம்.எஸ்.ஓ. பர்மனென்ட் நிதி லிட்.,
பதிவு அலுவலகம் : 37, தேரடி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
☎ : 28442139, 28445422 & 28445084 CIN No. U65110TN1881PLC002799

நகை ஏல அறிவிப்பு

நிதியின் கீழ்கண்ட கிளைகளில் நகை ஈட்டின் பேரில் கடன் பெற்று நிலுவைத் தேதிக்குள் கடனைத் திருப்பிச் செலுத்தாத கடன்தாரர்களுக்கு முறைப்படி பதிவுத் தபால் மூலம் தனித்தனியாக கடன் பாக்கி தொகை குறித்த நகை ஏல அறிவிப்பு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

ஏலத்தொகை, சம்பந்தப்பட்ட கடன்தாரர்களின் கடன் கணக்கில் வரவு வைக்கப்படும். ஏலத்தொகையை கடன் கணக்கில் வரவு வைத்தது போக மேலும் கடன் பாக்கி இருந்தால் கடன்தாரரின் பேரில் கோர்ட்டு மூலம் நடவடிக்கை எடுத்து தொகை வசூல் செய்யப்படும். ஏலத்தொகையை கடன் கணக்கில் வரவு வைத்தது போக, கடன்தாரருக்கு மீதித்தொகை கொடுக்க வேண்டியிருந்தால், மேற்படி தொகை, கடன்தாரருக்கு நிதியில் வேறு ஏதேனும் கடன் இருந்தால் அல்லது வேறு வகையில் பாக்கி இருந்தால் அந்த பாக்கிகளுக்கு வரவு வைக்கப்படும்.

இந்த அறிவிப்பு, தபால், பதிவுத்தபால் கிடைக்கப் பெறாத கடன்தாரர்களுக்கும், கடன்தாரர்கள் இறந்திருப்பின், அவர்களது வாரிசுதாரர்களுக்கும், நாமினிகளுக்கும் மற்றும் கடன்தாரர்கள் தற்சமயம் வேறு முகவரியில் இருக்கும் பட்சத்திலும் பொருந்தும். கடன்தாரர்களின் பெயர் மற்றும் விபரங்கள் சம்மந்தப்பட்ட கிளை அலுவலக அறிவிப்பு பலகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

காலாவதியாகியுள்ள நகைக்கடன் பைசல் செய்வதற்காக ஏலம் நடைபெற உள்ள கிளைகள் : திருவல்லிக்கேணி, அசோக் நகர், சைதாப்பேட்டை, வில்லிவாக்கம், குரோம்பேட்டை, பம்மல், அம்பத்தூர், ஆவடி, விருகம்பாக்கம், வேளச்சேரி, நங்கநல்லூர், கொளத்தூர், அண்ணா நகர், ஷெனாய் நகர், போரூர், மேடவாக்கம், திருநின்றவூர், திருவொற்றியூர், திருவான்மியூர், தாம்பரம், கூடுவாஞ்சேரி, ஊரப்பாக்கம், ஓசூர், திருப்பூர், கோயம்புத்தூர், சிங்காநல்லூர், ஸ்ரீரங்கம் / உறையூர், கும்பகோணம், மதுரை, கரூர், துடியலூர், சொக்கிக்குளம், தர்மபுரி, இடையர்பாளையம், கிருஷ்ணகிரி, சேலம், சேலம் குகை, ஈரோடு

கடன்தாரர்கள் தங்கள் கடனுக்கான மேற்படி அறிவிக்கப்பட்டுள்ள கிளைகளில் முழுபாக்கித் தொகைகளையும் **19.01.2025** தேதிக்கு முன் செலுத்தி கடனை தீர்க்காவிட்டால், அவர்களால் ஈடு வைக்கப்பட்ட நகைகள் **20.01.2025** திங்கட்கிழமை காலை **10.30** மணிக்கு நிதியின் பதிவு அலுவலகத்தில் பகிரங்க ஏலம் விடப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நிதியின் சட்ட விதிமுறைப்படி நகைகள் ஏலம் விடப்படும். ஏலம் கேட்க விரும்புவோர் டேவணித்தொகையாக **ரூ.25,000/-** ஏலம் நடைபெறும் பதிவு அலுவலகத்தில் செலுத்த வேண்டும். ஏலத்தை முன் அறிவிப்பின்றி ரத்து செய்யவோ, நிறுத்தவோ அல்லது தேதி மற்றும் இடத்தை மாற்றவோ அல்லது குறிப்பிட்ட நகைகளை ஏலம் விடாமல் நிறுத்தி வைக்கவோ நிதிக்கு முழு அதிகாரம் உண்டு. மேற்கண்ட காரணங்களுக்காக ஏலம் விடாமல் நிறுத்தி வைக்கப்பட்ட நகைகளைப் பின்னர் வேறு தேதிகளில் நிதி விரும்புகிற இடத்தில் முன் அறிவிப்பின்றி ஏலம் விடுவதற்கு நிதிக்கு முழு அதிகாரம் உண்டு.

நா. வெங்கோபன்
நிர்வாக இயக்குனர்

// உத்தரவின்படி //

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி